

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.2.2026) சென்னையில் நடைபெற்ற, சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் டாக்டர் ஆர்.என். மஞ்சுளா அவர்களின் மகள் மயூரி – ஜேம்ஸ் கோவ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன், தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகம்மது ஜின்னா ஆகியோர் உடனிருந்தனர்.



திருச்சியில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வருகின்ற 22 ஆம் தேதி (750 காளைகள்) நடைபெற இருக்கும் ஜல்லிக்கட்டு விழாவை முன்னிட்டு காஜாமலையில் உள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு விழா பந்தல் காலை வைத்து ஏற்பாடுகளை தொடங்கி வைத்தார். அருகில் மாநகரச் செயலாளர் அன்பழகன், பொருளாளர் துரைராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் காஜாமலை விஜய், மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கமல், முஸ்தபா, முத்துக்குமரன், கலைச்செல்வி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சாதனைகள் படைத்து – ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார்

# தென்னாட்டின் எஃகு மனிதர், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## விருதுநகர் இளைஞரணி மாநாட்டில் – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**விருதுநகர், பிப்.10-**

**நமக்கெல்லாம் ஒவ்வொரு நாளும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தென்னாட்டில் எஃகு மனிதராகத் திகழ்கிறார் என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. விருதுநகர் இளைஞரணி மாநாட்டில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**



விருதுநகர் இளைஞரணி மாநாட்டில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியது வருமாறு :-

விருதுநகரில் நடைபெறும் இளைஞரணியின் எழுச்சி மாநாட்டிற்கு தலைமையேற்று நடத்தும் இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின். தலைவர் கலைஞர் அவர்கள் நமது முதலமைச்சரைப் பற்றி சொல்லுங்கள் எனக் கேட்ட போது, “உழைப்பு, உழைப்பு, உழைப்பு” என்ற ஒருவரைப் பற்றிச் சொன்னார்கள்.

அந்த உழைப்புக்கு சொந்தக்காரராக உறக்கம் என்றால் என்ன என்பதே தெரியாத ஒரு தலைவராக இளைய தலைமுறைக்கு தன்னுடைய உழைப்பால் தான் வாழக்கூடிய அந்த “உழைப்பு, உழைப்பு, உழைப்பு” என்ற வாழ்க்கை முறையால் ஒரு உதாரணமாக முதலமைச்சர் இருக்கிறார்.

உழைப்பு மட்டுமில்லை, உறுதி என்றாலும் நான்தான், பாசிச சக்திகளை எதிர்க்க கூடிய உறுதிமிக்க தலைவன் நான்தான். Man of Steel from South India. தென்னாட்டின் எஃகு மனிதர் என்று எல்லோரும் பாராட்டக் கூடிய ,புகழக்கூடிய, நமக்கெல்லாம் ஒவ்வொரு நாளும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்க கூடிய, நம்முடைய முதலமைச்சரான மு.க.ஸ்டாலின்

இந்த மாநாட்டை ஒரு வெற்றி மாநாடாக அமைத்து காட்ட வேண்டும் என்று, இங்கிருந்து அகலாமல் அல்லும் பகலும் துயிலாது பாடுபட்டு இந்த மாநாட்டை முன்னெடுத்து நடத்தி இருக்கக்கூடிய மண்டலப் பொறுப்பாளரும், அமைச்சருமான தங்கம் தென்னரசு அவர்களுக்கு, எனது பாராட்டுகளை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வளவு பெரிய இளைஞர் கூட்டத்தைப் பார்க்கும் போது, உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்கள் சொல்ல வேண்டும் என்ற எண்ணமே தோன்றுகிறது. வெற்றியும் நமதே என்பதை உறுதி செய்யக்கூடிய ஒரு மாநாட்டை அவர் நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதால், அவரை மனமார்ந்து பாராட்டவும், வாழ்த்தவும் தோன்றுகிறது.

இது இளைஞரணியின் இரண்டாவது மாநாடு. இதற்கு முன்னால், கோவையிலும், தஞ்சையில் நடைபெற்ற “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” மாநாட்டையும் நாம் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியிருக்கிறோம். இந்த இரண்டு மாநாடுகள் முடிந்த பிறகு, பலருக்கு இருந்த சந்தேகங்கள் அனைத்தும் தெளிவாகப் போக்கப்பட்டிருக்கும்.

நான் உறுதியாகச் சொல்கிறேன், பெண்கள், இளைஞர்கள் என அனைவரும் முதலமைச்சர் அவர்களோடு தான் இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இளைஞர்களுக்கும் பெண்களுக்கும், யாரோடு இருந்தால் தமிழ்நாடு பாதுகாப்பாக இருக்கும் என்பது தெளிவாகத் தெரியும்.

நமக்கு எதிராக ஒரு கூட்டணி உருவாக இருக்கிறது. எல்லோரும் கையை கோர்த்துக்கொண்டு மேடையில் ஏறுகிறார்கள். அது, அதிமுக தலைமையிலான கூட்டணி இல்லை; பாஜக தலைமையிலான கூட்டணிதான். அந்த கூட்டணியில் இருப்பவர்கள் அனைவரும் பிரதமருடன் கைகோர்த்து நிற்கிறார்கள்.

சில நாட்களுக்கு முன்னால் டெல்லியில் ஒரு பட்ஜெட் படிக்கப்பட்டது. அந்த பட்ஜெட் படிப்பதற்கு முன், முதலமைச்சர் அவர்கள் காலை நேரத்தில் தனது சமூக வலைதளத்தில் ஒரு பதிவை வெளியிட்டார். “தேர்தல் வருகிறது; அதனால் இந்த பட்ஜெட்டில் ஏதாவது தருவார்கள் என்று நினைக்கிறேன்” என்று. ஆனால் அப்போதும் தமிழ்நாட்டுக்கு அல்லி இல்லை, கிள்ளி கூட கொடுக்க மாட்டோம் என்று சொல்லக்கூடிய பாஜகவோடு கைகோர்த்து நிற்கும் துரோகக் கூட்டணியாகவே இது அமைந்துள்ளது.

ரயில்வே திட்டங்களை எடுத்துக் கொண்டால், மகாராஷ்டிரத்திற்கு 24 ஆயிரம் கோடி ரூபாய், உத்தரப் பிரதேசத்திற்கு 20 ஆயிரம் கோடி ரூபாய், குஜராத்திற்கு 17 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால் தமிழ்நாட்டுக்கு வெறும் 7,600 கோடி ரூபாய் தான். இந்த துரோகத்தோடு கைகோர்த்துக் கொண்டே நமக்கு எதிரான ஒரு கூட்டணி உருவாகியுள்ளது.

நானும், கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸும் பலமுறை டெல்லி சென்று நிதிக்காக போராடியிருக்கிறோம். நம்ம பிள்ளைகள் படிப்பதற்காக, அவர்கள் ஹிந்திய திணிப்பேன், அதை ஏத்துக்கொண்டால் தான் உங்களுக்கு நிதி கொடுப்போம் என்று, தமிழ்நாட்டில் படிக்கும் மாணவர்களுக்கு வர வேண்டிய ரூபாய் 3,500 கோடிக்கும் மேற்பட்ட நிதியை நிறுத்தி வைத்திருக்கும் துரோகக் கூட்டணியோடு அதிமுக கைகோர்த்துக் கொண்டிருக்கிறது.

கிராமப்புற மக்கள் 100 நாள் வேலைத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகிறார்கள். ஆனால் பாஜக பெயரை மட்டும் மாற்றவில்லை; அந்தத் திட்டத்தையே ஒழிக்க முயல்கிறது. யாருக்கு வேலை கொடுக்க வேண்டும், யாருக்கு வேலை கொடுக்கக் கூடாது என்பதையும் டெல்லியில் உள்ள அதிகாரிகள் தான் முடிவு செய்வார்கள் என்று கூறும் அராஜகப் போக்கோடு அவர்கள் கைகோர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இனிமேல், சாதாரண மக்களுக்கு 100 நாள் வேலை கூட இல்லாமல் செய்துகொண்டு இருக்கக்கூடிய ஒரு கூட்டம் . நமக்கு எதிராக அனிதிரண்டு கொண்டு இருக்கிறது.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்புடன் வர்த்தக ஒப்பந்தம் செய்தோம் என்று பிரதமர் பெருமையாகச் சொல்கிறார். அந்த ஒப்பந்தம் எப்படி இருக்கிறது என்றால், “நீ உமி கொண்டு வா, நான் அவல் கொண்டு வருகிறேன்; இருவரும் ஊதி ஊதி திங்கலாம்.” என்ற நிலைதான்.

நாம் அனுப்பும் பொருட்களுக்கு 18 சதவீத வரி. ஆனால் அமெரிக்காவில் இருந்து வரும் பொருட்களுக்கு வரியே இல்லை. இதனால் நம் விவசாயிகள் விளைவிக்கும் பொருட்கள் அவர்களோடு போட்டியிட முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றன. நமது விவசாயிகளின் எதிர்காலம் என்னாவது? ஆனால், இது எதுக்கும் பதில் சொல்ல மாட்டார் பிரதமர் மோடி.

நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு வழக்கமாக பிரதமர் பதில் சொல்ல வேண்டும். ஆனால் இந்த முறை பிரதமர் வரவில்லை. காரணம், நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட போது “நீங்கள் எங்கு இருந்தீர்கள்?” என்ற கேள்வி எழுப்பப்பட்டதற்கு பதில் சொல்ல பிரதமர் தயாராக இல்லை. இதன் காரணமாக நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

அந்த கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல், பிரதமர் அவர்கள் ஏதாவது வந்து பதில் சொல்லுவார் என்று அனைவரும் எதிர்பார்த்தோம். ஆனால் அவர் வரவில்லை. அவைத் தலைவர், “பிரதமர் வர மாட்டார்; பதில் சொல்ல மாட்டார்” என்று தெரிவித்தார். அதாவது, நாடாளுமன்ற வரலாற்றிலேயே முதல் முறையாக, குடியரசுத் தலைவர் உரைக்கு பிரதமர் பதில் சொல்லாமல் நிறைவேற்றப்பட்ட ஆட்சி, பாஜக ஆட்சிதான்.; நரேந்திர மோடி ஆட்சிதான்..

அதற்கு அவர்கள் சொன்ன பதில்: “விஷ்வகுரு.” சாதாரண பிரதமர் அல்ல நரேந்திர மோடி; விஷ்வ குரு என்று அவர்களும், அவர்களுடைய கட்சியும் போற்றிக் கொண்டிருக்கும் ஒருவர். அவரே சொல்கிறார், “நான் என் அம்மாவுக்கு மட்டும் பிறந்தவன் இல்லை; கடவுளால் அனுப்பப்பட்டவன்” என்று.

அப்படிப்பட்ட கடவுள் அனுப்பிய குழந்தை, நாடாளுமன்றத்தில் வந்து ஏன் பதில் சொல்லவில்லை தெரியுமா? எதிர்க்கட்சியில் இருக்கக் கூடிய பெண்கள் அவரை அச்சுறுத்தி விடுவார்கள் என்ற பயத்தில், எதிர்க் கட்சியில் உள்ள பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அஞ்சி, “பிரதமர் வர வேண்டாம்” என்று அவைத் தலைவர் சொல்லியதாக தெரிவிக்கப்படுகிறது என்றால், நாம் எப்படிப்பட்ட அராஜக ஆட்சியின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இதை எதிர்த்து கேள்வி கேட்டு, ஒரு மாற்றத்தை கொண்டு வரக்கூடிய ஒரே தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை தவிர வேற யாரும் இல்லை என்று தமிழ்நாடு உணர்ந்து கொண்டு இருக்கின்றது.

இங்கே இருக்கக்கூடிய இளைஞர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒபாமா அவர்கள் அமெரிக்க ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னர், “Yes, You Can” என்றார். இளைஞர்கள் கேட்கலாம், எங்களால் இந்த நாட்டில் ஒரு மாற்றத்தை கொண்டு வர முடியுமா என்று. ஒபாமா அமெரிக்க அதிபராக பதவி ஏற்றுக் கொண்டபோது அவரது வயது 47. தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட போது அவரது வயது 44.

பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கியபோது அவருக்கு வயது 40. நாவலர் நெடுஞ்செழியன் 30 வயதில் இருந்தார். தலைவர் கலைஞர் 25 வயதில், முதல்வர் மு.க. ஸ்டாலின் இளைஞரணி செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்டபோது 27 வயதில் இருந்தார். உங்களால் முடியும்; உங்களைத் தவிர வேறு யாராலும் முடியாது. “Yes, You Can”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் சேலம் மாவட்டத்தில் திறந்து வைத்த –

# ரூ.196.92 கோடியில் 1,956 அடுக்குமாடிக் குடியிருப்புகள்!

## திட்டப் பகுதியில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்று சிறப்புரை!

*சேலம், பிப்.10*

முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் 1,956 குடியிருப்புகள் ரூ.196.92 கோடி மதிப்பிலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.13.50 கோடி மதிப்பிலும் மற்றும் மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பிலும் என முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, திடீர் நகர் திட்டப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்றார்.

முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக சேலம் மாவட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.196.92 கோடி மதிப்பிலும், ஊரக வளரச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.13.50 கோடி மதிப்பிலும், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை யின் சார்பில் ரூ.75 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாநகராட்சி, திடீர் நகர் திட்டப் பகுதியில் இந்நிகழ்ச்சி சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். அதே போன்று, பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், சேலம் மாநகராட்சி, அவ்வை நகர் பகுதியில் ரூ.32.90 கோடி மதிப்பில் 336 அடுக்குமாடி குடியிருப்புகள், திடீர் நகர் பகுதியில் ரூ.62.71 கோடி மதிப்பில் 588 அடுக்குமாடி குடியிருப்புகள், அல்லிக்குட்டை 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் ரூ.49.25 கோடி மதிப்பில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள், நேரு நகர் 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் ரூ.27.81 கோடி மதிப்பில் 280 அடுக்குமாடி குடியிருப்புகள், காந்தி நகர் 1 மற்றும் 2 திட்டப்பகுதியில் ரூ.24.25 கோடி மதிப்பில் 248 அடுக்குமாடி குடியிருப்புகள் என மொத்தம் ரூ.196.92 கோடி மதிப்பில் 1,956 அடுக்குடிமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு, இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த குடியிருப்புகள் 2 சாலிட்டோர் கதவுகள், 2 பிவிசி கழிவறை கதவுகள், 2 யுபிவிசி சன்னல்கள், 2 கழிவறை வெண்டிலேட்டர்களுடனும், வீட்டின் உட்புற பகுதியில் வெள்ளை நிறப்பூச்சும், வெள்ளிப்புற பகுதியில் வண்ண எமல்சன் பூச்சும் செய்யப்பட்டுள்ளது.

மேலும், இக்குடியிருப்புகளுக்கு, மாநகராட்சியிடமிருந்து குடிநீர் இணைப்பு பெறப்பட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய உரிய குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் வழியாக பொது குடிநீர் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது. மேலும், ஒவ்வொரு குடியிருப்பிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சேலம் மாநகராட்சியின் பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ஆத்தூர், அயோத்தியாபட்டணம், எடப்பாடி, காடையாம்பட்டி, கொளத்தூர், மகுடஞ்சாவடி, மேச்சேரி, நங்கவல்லி, ஓமலூர், பி.என்.பாளையம், பனமரத்துப்பட்டி, சேலம், தலைவாசல், தாரமங்கலம், வாழப்பாடி, வீரபாண்டி, ஏற்காடு ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.13.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், உணவு தானிய சேமிப்பு கிடங்குகள், சமுதாயக்கூடங்கள், பொது சுகாதார கட்டடங்கள், பொது விநியோ கக் கடைகள் உள்ளிட்ட பல்வேறு முடிவுற்ற திட்டப் பணிகளையும், மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், ரூ.75 இலட்சம் மதிப்பில் சேலம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள நாமக்கல் மண்டலத்திற்கான புதிய மருந்து கட்டுப்பாடு, உதவி இயக்குநர் அலுவலக கட்டடம் ஆகிய பணிகள் என மொத்தம் ரூ.211.17 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்துள்ளார்கள்.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் திருமதி சங்கீதா நீதிவர்மன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய செயற்பொறியாளர் விஜய மோகன், உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கருப்பூர் பேரூராட்சியில் ரூ.18.50 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியினை 07.02.2026 அன்று திறந்து வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.